**செ.வெ.எண்: 51/ஜனவரி** **நாள்: 30.01.2016**

# செய்திக்குறிப்பு

மாணவர்களின் படைப்பாற்றலையும் பேச்சாற்றலையும் வளர்க்கும் நோக்கில், இராமநாதபுரம் மாவட்டத் தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் இராமநாதபுரம் நகராட்சி பெண்கள் மேனிலைப்பள்ளியில் கல்லூரி மாணவர்களுக்கு 27.01.2016 ஆம் நாளன்றும், 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 28.01.2016 ஆம் நாளன்றும் நடத்தப்பெற்றன.

இதில் கல்லூரி மாணவர்களுக்கு 27.01.2016 ஆம் நாளன்று நடத்தப்பெற்ற கவிதைப் போட்டியில் இராமநாதபுரம் செய்யது அம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவி த.மதுபாலா முதற்பரிசையும், பரமக்குடி, அரசு கலைக் கல்லூரி மாணவன் பா.முப்படை இரண்டாம் பரிசையும், கட்டுரைப் போட்டியில் இராமநாதபுரம், சேதுபதி அரசு கலைக் கல்லூரி மாணவி பூ.ராஜாத்தி முதற்பரிசையும், இராமநாதபுரம் செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரி மாணவன் சா.முகம்மது முஸம்மில் இரண்டாம் பரிசையும். பேச்சுப் போட்டியில் இராமநாதபுரம் செய்யது அம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவி செ.தஸ்லிமா நஸ்ரின் முதற்பரிசையும், திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவன் மு.விஜய்மில்டன் இரண்டாம் பரிசையும் வென்றனர்.

மேலும் பள்ளி மாணவர்களுக்கு 28.01.2016 ஆம் நாளன்று நடத்தப்பெற்ற கவிதைப் போட்டியில், பரமக்குடி லயன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவி மு.அபிநாயா முதற்பரிசையும், இராமநாதபுரம் செய்யது அம்மாள் மேனிலைப்பள்ளி மாணவி கா.உமா இரண்டாம் பரிசையும், கட்டுரைப் போட்டியில் இராமநாதபுரம் புனித அந்திரேயா பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி பா.நித்யா முதல்பரிசையும் கீழக்கரை, ஹமீதியா பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி மு.வினோதினி இரண்டாம்பரிசையும் வென்றனர். பேச்சுப்போட்டியில் இராமநாதபுரம் புனித அந்திரேயா பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி ஜா.பவதாரணி முதற்பரிசையும், இராமநாதபுரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி நா.ஆர்த்தி இரண்டாவது பரிசையும் வென்றனர்.

பள்ளி, கல்லூரி போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.10000/-மும், இரண்டாம் பரிசாக ரூ.7000/-மும் வழங்கப்பட்டன.

முதற்பரிசு பெற்ற பள்ளி, கல்லூரி மாணவர்கள் மட்டும் மாநில அளவில் 04.02.2016 அன்று நடைபெறவிருக்கும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் கலந்துகொள்ளப் பரிந்துரைக்கப்படுவர். மாநில அளவில் நடைபெறவிருக்கும் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு முதற்பரிசாக ரூ.15000/-ம், இரண்டாம்பரிசாக ரூ.12000/--ம், மூன்றாம்பரிசாக ரூ.10000/-ம் வழங்கப்படும். மேலும் கல்லூரி போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்கள் அடுத்தாண்டு சென்னையில் 2015-16 ஆம் ஆண்டிற்கு தமிழ் வளர்ச்சித் துறையால் ஒருவார காலம் நடத்தப்பெறும் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறையிலும் பங்கு பெற அழைக்கப்பெறுவர்.

கல்லூரிப் போட்டிகளுக்கு நடுவர்களாக சோழந்தூர், அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திருமதி அ. மரியஜாக்குலின் சாகாயம் அவர்களும் திருப்பாலைக்குடி அரசு மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சே.தமிழரசி அவர்களும் சத்திரக்குடி அரசு மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் அ.வெ.ஜெயகௌரி அவர்களும் பள்ளிப் போட்டிகளுக்கு நடுவர்களாக இராமநாதபுரம் பாத்திமா ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் (பொ) திரு.அ.மாயழகு அவர்களும், சேதுபதி அரசு கலைக் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் ர.அதிசயம் அவர்களும், இராமநாதபுரம் அரசு மகளிர் கலைக் கல்லூரி உதவிப் பேராசிரியை முனைவர் ச.கனகவள்ளி அவர்களும் நடுவர்களாகப் பணியாற்றினர். இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளை சென்னை தமிழ் வளர்ச்சி இயக்ககக் கண்காணிப்பாளர் திரு.வ.சுந்தர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டன.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**